வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———— ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 30.11.2024 சனிக்கிழமை | இதழ் : 334 | பக்கங்கள் : 12

# சீன தூதர் கூறியது இனவாதக் கருத்து!

## அரசாங்கத்துக்குச் சார்பாக தமிழ் மக்களை திருப்ப முயற்சி என்கிறார் கஜேந்திரகுமார்

- பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், நவம்பர் 30

இலங்கையில் உள்ள சீனத் தூதுவர் இலங்கையில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் தொடர்பில் முரண்பாடான தகவல்களை கூறுவது ஏற்கக்கூடிய விடயம் அல்ல என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (11)

## சீரற்ற காலநிலையால் யாழில் 69 ஆயிரத்து 384 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரையிலான நிலவரப்படி 20 ஆயிரத்து 732 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 384 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

4 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 178 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும், (11)

## ஜனாதிபதி அநுரவுக்கு நன்றி கூறிய செல்வம்!

வவுனியா, நவ. 30

மக்களின் மனதில் இருக்கும் வலி சுமந்த நாளை அஞ்சலி செய்து நினைவு கூரும் அந்த நாட்களான நடந்து முடிந்த மாவீரர் தினத்தை நினைவு கூற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் அரசு அனுமதியை வழங்கியமைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்துத் (11)

## மாகாண சபை தேர்தல் குறித்து கலந்துரையாடல் அடுத்த வாரம்

கொழும்பு, நவ. 30

மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாக, பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

சபைத் தலைவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க (11)

### வெள்ள அனர்த்தப் பாதிப்பு:

## யாழ்ப்பாணத்துக்கு முதற்கட்டமாக 12 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ. 30

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினரால் முதற் கட்டமாக ரூபா 12 மில்லியன் நிதி விடுவிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட செயலா ளர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினரால், பிரதேச செயலக ரீதியாக பாதுகாப்பு நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கான சமைத்த உணவு மற்றும் உலர் உணவு என்பவற்றுக்காக ரூபா.11 மில்லியனும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அவசர திருத்தப் பணிகளுக்காக ரூபா 1 மில்லியனும் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

## மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்க முயன்றால் தடுத்து நிறுத்துவோம்!

### விமல் வீரவன்ஸ விடாப்பிடி

கொழும்பு, நவ. 30

"பொலிஸ் அதிகாரம், நிதியம் அமைக்கும் அதிகாரம் உட்பட மாகாண சபைகளுக்கு இதுவரை வழங்கப்படாத அதிகாரங்களை வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அதனை தடுப்பதற்கு முன்னின்று செயற்படுவோம்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாம் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை. ஒதுங்கவும் இல்லை. பொதுத்தேர்தலில் மட்டுமே போட்டியிடவில்லை. இனி எங்கள் பயணம் தனி வழி அரசியல் (11)

## வெள்ளை வான் கடத்தல்கள் ராஜித சேனாரத்ன விடுவிப்பு

கொழும்பு, நவ. 30

வெள்ளை வான் கடத்தல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2019 ஜனாதிபதித் தேர்தலின்போது வெள்ளை வான்களில் ஆட்கள் கடத்தப்பட்டமை உள்ளிட்ட சம்ப வங்கள் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு (11)

## பிரபாகரன் படத்தை பேஸ்புக்கில் பகிர்ந்தவர் ரி.ஐ.டியால் கைது!

யாழ்ப்பாணம், நவ. 30

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் புகைப்படத்தை முகநூலில் பகிர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் ஒருவரை, பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணுவில் பகுதியை சேர்ந்த 37 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் (11)

## நாடு முழுவதும் மழையினால் 132,071 குடும்பங்கள் பாதிப்பு!

### உயிரிழப்பு எண்ணிக்கை 14 ஆகியது

கொழும்பு, நவ. 30

நாடு முழுவதும் தொடரும் மோசமான வானிலையால் அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நேற்று பிற்பகல் 02.00 மணி வரையிலான புதுப்பிப்பின் படி,

மோசமான வானிலையால் நாடு முழுவதும் 132,071 குடும்பங்களைச் சேர்ந்த 441,373 பேர் பாதிக்கப்பட்டனர்.

19 பேர் காயமடைந்தும், ஒருவர் காணாமலும் (11)

## பயங்கரவாதம் மீண்டும் நாட்டில் தலைதூக்குமோ என்று சந்தேகம்!

### ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, நவ. 30

வடக்கில் இடம் பெறும் விடயங்கள் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குமோ என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் யட்டிநுவர தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்ற அரசாங்கமே ஆட்சியில் உள்ளது. அரசாங்கம் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளது. ஊழல் மோசடிகளை (11)

## அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை வழங்க போதிய மருந்து கையிருப்பில்!

### யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ் போதனா வைத்திய சாலையில், ஒரு சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவினாலும், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ சேவையை வழங்க, மருந்துகள் கையிருப்பில் இருப்பதாக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், இவ்வாறு குறிப்பிட்டார்.

போதனா வைத்தியசாலைக்குள் வெள்ளம் புகுந்த நிலையில், தற்பொழுது சிகிச்சைகள் வழமைக்கு திருப்பியுள்ளதாகவும், த.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார். (அ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்கு எம்மால் முடிந்தவரை தொடர்ந்து பயணிப்போம்

## யாழ் பல்கலை மாணவர் ஒன்றியம் உறுதி

யாழ்ப்பாணம், நவ. 30

தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைக்காக போராடி வரும் ஒரு இனமாக காணப்படுகின்ற நிலையில் அதனை வென்றெடுப்பதற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் எங்களால் முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம் என யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சோமபாலன் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது-அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த சீன தூதவர் தமிழ் மக்கள் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்து மாற்றத்துக்காக பயணிப்பதாகவும் இனப் பிரச்னை தொடர்பில் ஒன்றிணைந்து பயணிப்பார்கள் எனத் தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் எந்த ஒரு நாட்டையும் நட்பு நாடாகவோ அல்லது எதிரி நாடாகவோ பார்ப்பது கிடையாது.

இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சீனத் தூதுவர் தெரிவித்த கருத்து தொடர்பில் சில விளக்கத்தை தெரிவிக்கலாம் என நினைக்கிறேன்.

தமிழ் மக்கள் வாழ்வியல் நீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் விவகாரம், சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கிப் பயணித்த நிலையில் அதற்கான தீர்வு கிடைக்கப் பெறவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

அண்மையில இடம்பெற்ற பாராளுமன்றத் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது. ஏனெனில் அதையும் தாண்டி பயணிக்கவேண்டிய தேவை இருக்கிறது.

அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் ஒருவர் காணாமல்போனவர்களை 15 வருடங்களாக காணவில்லை என்றால் காணவில்லைதான் என்ற கருத்துப்பட கருத்து தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்தை பார்த்தால் 2009 இற்கு முன்னர் அவர்களுடைய கட்சி பலரை காணாமல் ஆக்கியது. அது தொடர்பில் கருத்து தெரிவிக்கவேண்டும் என்பதற்காக இதை அவர் அவ்வாறு காணாமல்போனது காணாமல்போனது தான் என்ற கருத்துப் பட கூறியிருக்கிறார்- என்றார். (அ)



# அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 30

அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு மக்களுக்கு உடுப்பிட்டி சொர்ண வைரவர் ஆலய நிர்வாகத்தினர் மதிய உணவு வழங்கினர்.

வலிகாமம் கிழக்கு வாதரவத்தை பிரதேசத்தின் அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பை (பொக்கணை) சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மக்கள் நிலவும் சீரற்ற கால நிலையை தொடர்ந்து ஏற்பட்ட மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கிராமத்துக்கு செல்லும் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் அப்பகுதி மக்களின் குடியிருப்புக்குள்ளும் வெள்ளம் உட்புகுந்துள்ளது. இதனால் முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் எனப்பலரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கிராம மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராசா நிரோஸின் ஊடாக உடுப்பிட்டி சொர்ண வைரவர் ஆலய நிர்வாகத்தினரின் நிதி உதவியுடன் இந்த மக்களுக்கான மதிய உணவு வழங்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்புடன் ஆலயத்தில் மதிய உணவு சமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதேவேளை, பிரித்தானியாவை சேர்ந்த புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிதிப் பங்களிப்புடன் அந்தப்பகுதியை சேர்ந்த முதியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிஸ்கெட்கள் வழங்கப்பட்டன. (எ)

# யாழில் படைகளின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

## இடையூறுகள் பற்றி அறியவில்லை என்கிறார் பாதுகாப்பு செயலாளர்

யாழ்ப்பாணம், நவ. 30

உயிரிழந்தவர்களை நினைவு கூரத் தடை செய்யப்படவில்லை என்றும் மாவீரர் நாள் நிகழ்வுகளில் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்பட்ட இடையூறுகள் தொடர்பில் தான் அறியவில்லை எனவும் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்த தெரிவித்தார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் நிறைவடைய முன் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மாவீரர் நாள் நிகழ்வுகளை குழப்பும் வகையில் முப்படையினர் மற்றும் பொலிஸாரால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டி எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்கு எந்த விதமான தடைகளையும் விதிக்கவில்லை. இதனை எமது அரசாங்கம் ஒரு கொள்கையாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் சட்டத்துக்குட்படாது சட்ட விரோதமான முறையில் நினைவேந்தல் முன்னெடுக்கப்படுமாயின் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீதியால் சென்ற பொழுது பொலிஸார் தடுத்த விடயம் தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஆனால், உயிரிழந்த உறவுகளை நினைத்து அவர்களின் உறவினர்கள், அன்பானவர்கள் நினைவேந்தல் செய்வதற்கு எமது அரசு தடை விதிக்கவில்லை"- என்றார்.

(எ-05)

# நவாலியில் மாவீரர் குட்டியின் நினைவிடம் சேதப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 30

நவாலி கிழக்கு, பிரசாத் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள குட்டி என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி பரமேஸ்வரனின் நினைவிடம் விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 1985ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த நிலையில் அவரது நினைவிடம் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மாவீரர் நாளன்று குறித்த நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நிலையில் குறித்த நினைவிடம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (எ- 05)

# மருதங்கேணி பாலம் ஊடான கனரகவாகன போக்குவரத்துக்கு தற்காலிகத் தடை



வடமராட்சி, நவ. 30

யாழ்ப்பாண மாவட்டத் தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக மருதங்கேணி பாலத்தின் இரு புறங்களும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதனால் பாலத்தின் ஊடாக கனரக வாகன போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

பாலம் மேலும் சேதமடையாத வகையில் பாலத்தின் இருபுறங்களும் தற்போது மண் மூடைகள் அணைக்கப்பட்டுள்ளது. விரைவில் பாலம் புனரமைக்கப்பட்ட பின்னர் கனரக வாகனப் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். (அ-2)

# 2 குளங்களுக்கு இடையே வான் பிரச்னை; மன்னார் செயலக கூட்டத்தில் முன்வைப்பு

மன்னார், நவ. 30

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வாழ்க்கை பெற்றான் கண்டலில் இரு குளங்களுக்கு இடையில் காணப்படும் வான் பிரச்னை குறித்து பாதிக்கப்பட்ட பொன்தீவு கண்டல் கமக்கார அமைப்பினர் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு தமது பிரச்னையை முன்வைத்தனர்.

இதன்போது பொன்தீவு கண்டல் கமக்கார அமைப்பு குறித்த விடயம் குறித்து மகஜர் ஒன்றை கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில்-

குறித்த வான் இரு கமக்கார அமைப்புக்கும் சொந்தமானதாக காணப்படுகின்றது. எனினும் குறித்த வான் வாழ்க்கை பெற்றான் கண்டல் கமக்கார அமைப்பினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

குறித்த வான் புனரமைப்பு செய்யப்பட்டபோது அதற்கான ஒப்பந்தத்தை ஒப்பந்தகாரர் எம்.சந்தியோகு என்பவருக்கு வழங்கி அவரால் நிர்மாணிக்கப்பட்டது.

இவ்வானிற்கு மேல் ஏறக்குறைய 30 ஏக்கர் புலக் காணி உள்ளது. இக் காணிகள் தாழ்வான பகுதியில் உள்ளதன் காரணத்தினாலும், பல்வேறு ஒப்பந்த வேலைகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக செய்வதன் காரணத்தினாலும், அதனை குறித்த ஒப்பந்தகாரர் தனக்கு சாதகமாக பயன்படுத்தி ஏற்கனவே இருந்த வானின் அளவை உயர்த்த தீர்மானித்துள்ளார்.

இது மட்டுமல்லாது நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் அவர்களுக்கு பணம் அல்லது பொருளை இலஞ்சமாக வழங்கி தனக்கு ஏற்றதுபோல் தீர்மானித்துள்ளார்.

இதனால் மேல் உள்ள பொன் தீவு கண்டல் கிராம வயல் காணிகள்,வீடுகள் யாவும் தண்ணீரில் மூழ்கி காணப்படுகின்றன.

இது தொடர்பாக காலம் காலமாக 2021 ஆம் ஆண்டில் இருந்து நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு எங்களால் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை.

எமது முறைப்பாட்டை அவர்கள் ஏற்பதாகவும் இல்லை. முருங்கன், கன்னாட்டி, பெரும்பரப்பு, சுண்டிக்குழி, பிச்சை குளம் போன்ற குளங்களின் நீர் அனைத்தும் பொன்தீவு கண்டல் குளத்தினூடாக இவ்வானை சென்றடைகின்றது.

தற்போது வான் உயர்த்தப்பட்டு உள்ளமையினால் நீர் வெளியேறுவது மிகவும் குறைவாக உள்ளது.

இதனால் இக்கிராமம் நீரில் மூழ்கும் நிலை காணப்படுகின்றது. இதற்கு முன்னர் முன்னாள் அரசாங்க அதிபரினால் குறித்த வானை திறந்து மூடும் வகையில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டபோதும், இவ் வான் கொங்கிறீட் வானாக அமைக்கப்பட்டுள்ளது - என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
30.11.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## விடலைத்தன அரசியலிலிருந்து விடுபடுதல்

ஆண்டுகள் தோறும் அழுது, தங்களின் பிள்ளைகளை நினைத்துக் கொள்ளும் நிகழ்வுகள் கடந்த பதனைந்து வருடங்களில் பல்வேறு விதமாக நடந்தேறியிருக்கின்றது. ராஜபக்ஷக்கள் அரக்கத்தனமாக துயிலும் இல்லங்களை இடித்தழித்தனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் எவ்வாறு ஈராயிரம் ஆண்டு கால பௌத்த அடையாளங்களை இடித்தழித்தனரோ, அதேபோன்றதொரு அடிப்படைவாத வெறித்தனத்தோடும், வெற்றி மமதையிலும், விடுதலைப் புலிகள் மீதான வெறுப்பை, போரில் இறந்து போன அவர்களது உறுப்பினர்களின் அடையாளங்கள் மீது காண்பித்தனர். வரலாற்றில், போரில் தோற்றவர்களை, போரில் வெற்றிபெற்றவர்கள் பெருந்தன்மையுடனும் கண்ணியத்துடனும் நடத்தும் மரபு பண்டைய அரசர் காலத்தில் கூட இருந்திருக்கின்றது. துட்டகெமுனு கூட, அவ்வாறான நற்புண்புகளை வெளிப்படுத்தியதாக, வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

தங்களை நவீன துட்டகெமுனுக்கள் என்று அழைத்துக் கொள்ள முற்பட்ட ராஜபக்ஷக்கள் தங்களை வெறித்தனத்தின் கோர முகமாகவே காண்பித்தனர். ஆனால், அப்போது கூட கோபங்களை தங்களுக்குள் புதைத்துக்கொண்டு, தங்களின் பிள்ளைகளை நினைவு கூர்வதை அவர்களது உறவினர்கள் கைவிடவில்லை. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில்தான், முதல் முதலாக அச்சமின்றி நினைவு கூர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டன. எனினும் கண்காணிப்புகள் தொடரவே செய்தது. கோட்டாபயவின் குறுகிய கால ஆட்சியிலும் கண்காணிப்புகள் தீரமடைந்தது, ஆங்காங்கே தடைகள் ஏற்படுத்தப்பட்டன - எனினும், துயிலும் இல்லங்களில் முடிந்தவரையில் மக்கள் ஒன்று திரண்டனர். ஆனால், இம்முறை ஒப்பீட்டடிப்படையில் மிகவும் சுதந்திரமாகவும் கண்காணிப்புக்கள் இன்றியும் தங்களின் பிள்ளைகளை நினைத்து அழுவதற்காக மக்களால் ஒன்று கூட முடிந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் மக்கள் சுதந்திரமாக தங்களின் பிள்ளைகளை நினைவு கூர முடிந்திருக்கின்றது என்று கூறுவதில் தவறில்லை - அதற்காக அநுர அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் அடிப்படைகளை ஏற்றுக்கொண்டு விட்டதாக அர்த்தமில்லை. வடக்கு மாகாணத்தில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை எதிர்பார்த்திராத, தமிழ்த் தேசிய அரசியலை அரைகுறையாக புரிந்து கொண்டிருக்கும் ஒரு குழுவினர், தங்களின் பிள்ளைகளை, உறவுகளை நினைவு கூர்வதற்காக ஒன்றுதிரண்ட மக்கள் தமிழ்த் தேசியத்தை நிலைநாட்டி விட்டதாக கதைகள் புனைய முற்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியலை மக்கள் மயப்படுத்தி, புதிய சூழலுக்கு ஏற்றவாறு எவ்வாறு அரசியலை கட்டியெழுப்புவது என்று தெரியாத குழுக்கள், மக்கள் தங்களை விட்டுப் பிரிந்த உறவுகளை எண்ணி சிந்தும் கண்ணீருக்கு தமிழ்த் தேசிய விளக்கமளிக்க முற்படுகின்றனர். ஏனெனில் அரசியலை புதிய சூழலுக்கு ஏற்றவாறு முன்னெடுக்கும் வழிவகைகள் இவர்களுக்குத் தெரியாது. இதன் காரணமாகவே இவ்வாறானவர்களை அரசியல் விடலைகள் என்று வரையறுக்க வேண்டியிருக்கின்றது. ஏனெனில் இவ்வாறானவர்கள் அரசியலை மந்திரம் போன்று உச்சரித்துவிட்டு தங்களின் வசதியான வாழ்வுக்குள் சுருங்கிக் கொள்கின்றனர்.

தங்களால் நேசிக்கப்படும் ஒருவர் பிரிவுறும் போது, ஏற்படும் துயரம், அதன் மீதான நினைவுகள் என்பது, அந்த குடும்பத்திற்கானது, அவர்களை நேசித்தவர்களுக்கானது. அதற்கு தமிழ்த் தேசிய விளக்கமளிப்பதானது, தேசிய அரசியல் பற்றிய அறியாமையிலிருந்தே நிகழ்கின்றது. விடுதலைப் புலிகள் அவர்களை நினைவு கூரும் போது இருந்த அரசியல் சூழல் வேறு. இப்போது, அவர்களை நினைவு கூர்வதென்பது முற்றிலும் அவர்களின் உறவுகள் தொடர்பானது மட்டும்தான். தேசிய அரசியல் என்பது, சூழ்நிலைகளை துல்லியமாக மதிப்பிட்டு, அந்தச் சூழலில் அரசியலை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்னுமடிப்படையில் அரசியலை திட்டமிடுவதாகும். இன்றைய காலத்தில், தூய தேசிய அரசியல் என்று ஒன்றில்லை - மக்களின் இருப்பை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்தும் ஏதேவொரு வகையில் தேசிய அரசியல்தான்.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2024

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"

- கௌதம புத்தர்



## 'மக்கள் செயல்' அமைப்பினரால் உணவுப் பொருட்கள் வழங்கல்



மன்னார், நவ. 30

கடும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மன்னார் வேட்டையாமுறிப்பு பகுதியில் வசிக்கும் 146 குடும்பத்தினருக்கு "மக்கள் செயல்" அமைப்பினரால் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து அடம்பனுக்குச் சென்ற குறித்த அமைப்பினர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசி, மா, சீனி, மீன் ரின் உள்ளிட்ட பொருட்களை வழங்கினர்.

குறித்த பகுதியில் வசிக்கும் மக்களில் பெருமளவானவர்கள் அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்பவர்கள் என்பதால் பொருளாதார ரீதியாக பலத்த சிரமங்களை எதிர்கொண்டுவருவதாக அந்தக் கிராமத்தின் பிரதிநிதிகளால் குறித்த அமைப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய குறித்த உதவிகள் வழங்கப்பட்டன. கையளிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாய் என்று 'மக்கள் செயல்' அமைப்பினர் தெரிவித்தனர். (எ)

## யாழ் ராணி ரயில் சேவை மறுஅறிவிப்புவரை இல்லை

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ் ராணி ரயிலின் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, யாழ் ராணியின் சேவை மறுஅறிவித்தல் வரை நடைபெறாது என யாழ். ரயில் நிலைய அதிபர் தெரிவித்துள்ளார். இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக ரயில் அநுராதபுரத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர் கூறினார். இதன் காரணமாக கடுகதி சேவையில் ஈடும் யாழ் தேவி அநுராத புரம் வரையில் ஒவ்வொரு நிலையங்களிலும் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றிச்செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் உதவி




யாழ்ப்பாணம், நவ. 30

பெருமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். தாழ்நிலப் பகுதிகளில் மழைநீர் வெள்ளக் காடாகத் தேங்கியுள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் பொதுமண்டபங்களிலும் தங்கியுள்ளனர். இவர்களுக்குப் பல பொது அமைப்புகளும் உதவிகளை வழங்கி வருகின்றன. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும் இம்மக்களின் கோரிக்கைக்கு அமைவாக உணவுப் பொதிகளை வழங்கி வருகின்றது. இந்த நிவாரணப் பணிகள் கிராமசேவையாளர்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இதுவரை வேறு அமைப்புகளிடம் இருந்து எந்த வித உதவிகளையும் பெறாதவர்கள் அவசியத் தேவைகள் இருப்பின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். கல்யாண பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்புவரும். ஆதரவு பெருகும்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். நட்பால் ஆதாயம் உண்டு.

**கடகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**சிம்மம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கன்னி**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

**விருச்சிகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வாகனம் தொந்தரவு தரும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளி வட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பெற்றோருடன் மனம் விட்டுபேசுவீர்கள்.

**மகரம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர், நண்பர்களால் ஆதாயமுண்டு. சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

# அரசாங்க உத்தியோகத்தர்கள் கடினமாக பணியாற்ற வேண்டும்

## பிரதி அமைச்சர் உபாலி தெரிவிப்பு



வவுனியா, நவ. 30

வெள்ளப் பாதிப்புக்களில் இருந்து மக்கள் விரைவாக மீள்வதற்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் கடினமாக பணியாற்ற வேண்டும் என்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வெள்ள நிலைமை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெள்ளப் பாதிப்பு விடயத்தில் வவுனியா மாவட்ட செயலகம் விரைவான நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அந்த வகையில் இன, மத, பேதம் என்ற விடயம் இங்கு இல்லை. அனைவரும் எங்களுடைய மக்கள்.

அரசியல் பேதமின்றி இந்த பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக உழைக்க வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் என்ற வகையில் நீங்கள் இந்த விடயத்தில் சற்று கடினமாக பணியாற்ற வேண்டும்.


இடரிலிருந்து விடுபடுவதற்கு அரசாங்கத்திடம் இருந்து நிதி உட்பட வேறு எத்தகைய உதவிகள் தேவைப்படினும் அதில் தலையிடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்- என்றார். (எ- 10)

# வயலில் வீழ்ந்து கிடந்த யானை மீட்பு

வவுனியா, நவ. 30

வவுனியா குடாச்சகொடியா வயல்வெளியில் சுகவீனம் காரணமாக கீழே வீழ்ந்து கிடந்த யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்த யானை மீட்கப்பட்டதுடன் குறித்த யானை எட்டு வயது மதிக்கத்தக்கது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசமான காலநிலை காரணமாக



உணவு தேடிச் சென்ற வேளையில் வயல்களில் தவறி விழுந்ததாகவும், வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (எ)

# எதிர்கால வெள்ள இடர் தணிப்பு நடவடிக்கைகளை திட்டமிடுங்கள்

## அதிகாரிகளிடம் ஆளுநர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள இடர் நிலைமை எதிர்காலத்திலும் நீடிக்காமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அதிகாரிகள் இப்போதே திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய யாழ். மாவட்டத்தின் இடர்நிலைமை மற்றும் எதிர்கால இடர் தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, பல இடங்களிலுள்ள ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கு மரக்கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பு போதியளவு தேவையாக இருப்பதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மேலும் தீவுப் பகுதிகளுக்கான மின்சாரத்துக்குரிய எரிபொருளை விரைந்து வழங்குவதற்கு கடற்படையினரின் ஒத்துழைப்பை ஆளுநர் கோரினார். கடற்படையினர் அதற்கு சாதகமான பதிலை வழங்கினர்.

இந்தக் கடினமான நேரத்தில் அனைத்து அதிகாரிகளும், முப்படையினரும், பொலிஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றினர். எதிர்காலத்திலும் இவ்வாறு ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்- என்றார். (எ-02-05)

# வீடுகளில் முடங்கியுள்ள மக்களுக்கு உரிய உணவுகள் வழங்கப்படவில்லை

## ரிஷாத் பதியுதீன் எம். பி. சுட்டிக்காட்டு

வவுனியா, நவ. 30

தொழிலுக்குச் செல்ல முடியாமல் இருப்பவர்கள் மற்றும் வெளியேற முடியாமல் வீடுகளுக்குள் தங்கியிருப்பவர்களுக்கு உரிய முறையில் உணவுகள் வழங்கப்படுவதில்லை. அவர்களை அடையாளங்கண்டு, தேவையான அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களை, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன், தொடர்ச்சியாக ஒருவார காலத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தினார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அவசர உதவிகளை துரித கதியில் முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், வெள்ளப் பாதிப்பினால் இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

சீரற்ற காலநிலையால் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் ஆராய்வதற்காக, விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில், வெள்ளப் பாதிப்புகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளையும், பிரபாகரனையும் போற்றுவது நாங்கள் முன்னோக்கிப் பயணிக்க உதவாது!

## முன்னாள் அமைச்சர் அலி சப்ரி கருத்து

கொழும்பு, நவ. 30

**இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் தலைவரையோ போற்றுவது நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது எனச் சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இனவாதத்தைப் பரப்புவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தெற்கின் கடும் போக்கு சக்திகளுக்கு அந்த வாய்ப்பை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார்.**



மாவீரர் தினத்தை முன்னிட்டு கடந்த புதன்கிழமை கடும் மழைக்கு மத்தியிலும் வட, கிழக்கு மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச்சென்று பெரும் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களை நினைவுகூர்ந்தனர்.

இந்நிலையில், நினைவுகூரல் தொடர்பில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி மேலும் கூறியிருப்பதாவது-

நாமனைவரும் ஒற்றுமையானதும், அமைதியானதுமான இலங்கையைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்திப் பணியாற்றும்போது, பல வருடங்களாக நீடித்த மிகமோசமான யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சார்ந்த நினைவுகளுக்கு மதிப்பளிக்கவேண்டியது மிக முக்கியமானதாகும்.

அதற்கமைய கடந்தகால கருத்தியலின் விளைவாக சில ரது பாதை திசை மாறியிருந்தாலும், அவர்கள் உட்பட சகல அன்புக்குரியவர்களையும் நினைவு கூருவதற்கு குடும்பங்களுக்கு இடமளிக்கப்படவேண்டும். இதுவோர் மனித உரிமை என்பதுடன், கடந்த காலக் காயங்களை ஆற்றுவதற்குரிய மிகமுக்கிய நகர்வாகும்.

இருப்பினும் இரக்கமற்ற வகையில் பயங்கரவாதத்தைக் கட்டமைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையோ அல்லது அதன் தலைவரையோ போற்றுவது நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கு ஏதுவான வழிமுறையாக அமையாது. மாறாக அத்தகைய நடவடிக்கைகள் கடந்தகால வலிகளையும், தேவையற்ற பதற்றங்களையும் தோற்றுவிப்பதுடன், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை நலிவடையச் செய்யக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றன.

வன்முறையைக் கொண்டாடுவதன் மூலம் அதன் காயங்களிலிருந்து மீளமுடியாது. மாறாக புரிந்துணர்வு, சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாகவே அதனை அடைந்துகொள்ள முடியும்.

அதேபோன்று தெற்கில் உள்ள கடும்போக்கு சக்திகள் இனவாதத்தைப் பரப்புவதற்கு ஏதுவான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர்களுக்கு அத்தகைய வாய்ப்பை வழங்குவதைத் தவிர்ப்போம்.

அதேவேளை, பல்லினத் தன்மை என்பது பிரிவினைக்கு வழிவகுப்பதாகவன்றி, எமது பலமாகத் திகழக்கூடிய "இலங்கையர்" என்ற அடையாளத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி நாமனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம் -என்றார். (அ)

# இந்திய-இலங்கை கூட்டு முயற்சி 500 கிலோ போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, நவ. 30

இந்திய-இலங்கை கடற்படையினரின் ஒருங்கிணைந்த நடவடிக்கையின் மூலமாக அரேபிய கடற்பரப்பில் இரண்டு மீன்பிடி படகுகளிலிருந்து சுமார் 500 கிலோ கிராம் கிரிஸ்டல் மெத் என்ற போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மீட்பு நடவடிக்கையானது நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் கொடியேற்றப்பட்ட மீன்பிடிக் கப்பல்கள் மூலம் போதைப்பொருள் கடத்தப்படுவதாக இலங்கை கடற்படையினர் இந்திய கடற்படைக்கு வழங்கிய தகவலுக்கு அமைவாக இந்த மீட்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

உளவுத்துறை தகவலுக்கு அமைய விரைந்து செயல்பட்ட இந்திய கடற்படையினர் படகுகளை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்படை, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் தகவல் இணைவு மையம் மற்றும் இந்திய கடற்படையின் வான்வழி பணிகள் மூலமான விரிவான கண்காணிப்பு ஆகியவற்றின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த முயற்சிகளின்போது சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு மீன்பிடிப் படகுகள் அடையாளம் காணப்பட்டன.

அவற்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது குறித்த போதைப்பொருள் தொகை கண்டுபிடிக்கப்பட்டதுடன், கடத்தல் நடவடிக்கையை முன்னெடுத்த ஒன்பது பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கை அதிகாரிகளிடம், ஒப்படைக்கப்பட்டதாக இந்திய கடற்படை கூறியுள்ளது. (அ)



# ராஜாங்கனை நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு!

கொழும்பு, நவ. 30

மோசமான வானிலை காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 10 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் வினாடிக்கு 11,800 கன அடி நீர் கலா ஓயாவுக்கு திறந்து விடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த நீர் நிலையை அண்மித்த மக்கள் வெள்ளம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக நோர்டன் பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்கம் தொடர்ந்து வடிந்து வருகின்றது.

காசல்ரீ மற்றும் மவுஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழியும் மட்டத்தை நெருங்கி வருவதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர். (அ)

அமைச்சுகளுக்கு சொந்தமான

# 254 அதிசொகுசு வாகனங்கள் ஏலத்தில் விட அரசு தீர்மானம்!

கொழும்பு, நவ. 30

தற்போது அமைச்சுக்களுக்குச் சொந்தமான சுமார் 254 அதி சொகுசு வாகனங்களை ஏலம் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை, அரசாங்க மதிப்பீட்டாளரின் சான்றிதழைப் பெற்று இந்த கார்கள் ஏலம் விடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்த சொகுசு கார்களை பராமரிக்க அரசு பாரிய செலவை சுமக்க வேண்டியுள்ளதுடன், இவற்றில் பெரும்பாலானவை முன்னாள் அமைச்சர்களே பயன்படுத்தியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரியில்லா வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதையும் அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது.

அத்துடன், 05 வருடங்களின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரை மீது டிசெ. 3, 4 இல் விவாதம்!

கொழும்பு, நவ. 30

10 ஆவது பாராளுமன்றத்தின் முதல்நாள் அமர்வின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய கொள்கை விளக்க உரை மீது பாராளுமன்றத்தில் இரு நாட்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இதன்படி டிசெம்பர் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் மேற்படி விவாதத்துக்கு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய டிசெம்பர் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் குறித்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டு, மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை விவாதிக்கப்படவுள்ளது. டிசெம்பர் 4ஆம் திகதியும் குறித்த பிரேரணை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம் பி.ப 5.00 மணிக்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கும் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

டிசெம்பர் 05ஆம் திகதி வியாழக்கிழமை எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கு வாக்கெடுப்புக் குறித்த தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய டிசெம்பர் 05ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை விவாதம் நடத்தப்படவுள்ளது. இது பற்றிய விவாதத்தை 06ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரையும் முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டது. (அ)

# முந்தல் பகுதியில் மின்சாரம் தாக்கி கணவனும் மனைவியும் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 30

முந்தல் 412 ஏக்கர் பகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மின்சாரம் தாக்கியதில் கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் 55 மற்றும் 52 வயதுடையவர்கள் என பொலிஸார் கூறினர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், தம்பதியர் வசித்து வந்த வீட்டுக்கு அருகில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ளனர்.

அந்த நிலையத்தில் மின்சார இணைப்புக்காக பொருத்தப்பட்டிருந்த மின்கம்பியில் ஏற்பட்ட பழுதை கணவர் திருத்த முற்பட்டபோது, அவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

இந்நிலையில், கணவரை காப்பாற்ற முயன்ற மனைவியும் மின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அதனையடுத்து, இருவரும் முந்தல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி கணவன், மனைவி இருவரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு புதிய வேட்புமனு கோரவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை



கொழும்பு, நவ. 30

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்ட வேட்பு மனுவை இரத்து செய்து மீண்டும் புதிய வேட்பு மனு கோரப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தக்கூடிய தினம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும், திகதி தொடர்பில் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை.

மீண்டும் கூடிய இறுதி தீர்மானத்தை எட்ட எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு உயர்நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 17 இலட்சத்தைக் கடந்தது!

கொழும்பு, நவ. 30

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,776,889 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதுடன், அந்த எண்ணிக்கை 357279 ஆகும்.

இது தவிர, ரஷ்யா, ஜேர்மனி, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிக சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# வீதியில் சரிந்த பாரிய மண்மேடு

கொழும்பு, நவ. 30

நாவலப்பிட்டி - தொலஸ்பாகே வீதியில் பாரிய மண்மேட்டுடன் மரங்கள் முறிந்து வீழ்ந்தால், அவ்வீதி ஊடான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியின் வெலிகொடவத்தை பகுதியில் நேற்று அதிகாலை மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. மண் மேடுகளுடன் சேர்ந்து மரங்கள் மின்கம்பிகள் மீது விழுந்துள்ளதால் நாவலப்பிட்டியின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ரூ.40 இலட்சம் பெறுமதியான மஞ்சள் கொழும்பில் சிக்கியது

கொழும்பு, நவ. 30

கொழும்பு-15 இல் உள்ள தனியார் களஞ்சிய வளாகத்தை சுற்றிவளைத்த நுகர்வோர் விவகார அதிகாரசபையின் புலனாய்வு அதிகாரிகள் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 765 கிலோகிராம் மஞ்சளை கைப்பற்றியுள்ளனர்.

இந்த மஞ்சள் கையிருப்பின் பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபாய் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

எந்தத் தகவலும் குறிப்பிடாமல், சந்தைக்கு வெளியிடத் தயாரான நிலையில், மஞ்சள் கையிருப்பு கைப்பற்றப்பட்டதாக அதிகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த மஞ்சள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டமை தெரியவந்ததாக அந்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# 130 இற்கும் மேற்பட்ட குளங்கள் பலத்த மழையால் பெரும் சேதம்

கொழும்பு, நவ. 30

பலத்த மழை காரணமாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரித்தான 130 இற்கும் மேற்பட்ட குளங்கள் சேதமடைந்துள்ளன.

வவுனியா மாவட்டத்திலேயே அதிகளவான அணைக்கட்டுகள் சேதமடைந்துள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ஸ குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் 42 அணைக்கட்டுகள் சேதமடைந்துள்ளதுடன் சேதமடைந்துள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களை புனரமைக்கும் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

# பணம் பெற்ற குற்றச்சாட்டு குறித்து முழுமையான விசாரணை வேண்டும்

## மனுஷ விஜித ஹேரத்திடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 30

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பணம் பெற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. அது தொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத்துக்கு அவர் அனுப்பிவைத்த கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஈ 8 விசா குழுவின் கீழ் பருவகால தொழில்வாய்ப்புக்களை நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்காக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் இலங்கை மற்றும் கொரிய குடியரசில் செயற்படுத்தப்படும் சட்ட நிலைமைகளை சம்பந்தப்படுத்திக்கொண்டு சட்டரீதியாகவும் வெளிப்படைத்தன்மையுடனுமே நடவடிக்கை எடுத்தேன்.

200 மில்லியன் டொலராக இருந்த நாட்டின் மாதாந்த வெளிநாட்டு செலாவணியை 500 மில்லியன் டொலர் வரை அதிகரிப்பதற்கு முன்னெடுத்த நடவடிக்கையின்போது இரு தரப்பு ஒப்பந்தத்தின் ஊடாக கொரிய தொழிலுக்காக தொழிலாளர்களை அனுப்புவதை அதிகரித்துக்கொள்வதற்கு கொரியாவில் பருவகால தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தேன்.

கடந்த ஒன்றை வருடமாக வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களுக்காக நான் பணம் பெற்றுக்கொண்டே அனுப்பியதாக எனக்கு எதிராக தொடர்ந்து சமூகவலைத்தலங்கள் மற்றும் பல்வேறு ஊடகங்கள் வழியாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்த குற்றச்சாட்டு எனது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க்கைக்கும் பாதிப்பாகும். இந்த குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிக்கிறேன்.

எனவே வெளிநாட்டுக்கு தொழிலுக்கு அனுப்பும் நடவடிக்கையில் பணம் பெற்றுக்கொண்டு அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி இருந்தால் அது பாரிய குற்றமாகும். அவர்கள் தொடர்பில் தராதரம் பார்க்காமல் சட்டத்தை நிலைநாட்ட வேண்டும். அதற்கு தேவையான நடவடிக்கை மற்றும் முறையான விசாரணையை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# கடும் மழையுடனான காலநிலையால் 4800 ஏக்கரில் நெற்செய்கை பாதிப்பு!

## விவசாயத்துறை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் பெரும்போக விவசாயத்தில் 4800 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், 3900 ஏக்கர் நெற்செய்கைப் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

விவசாயத்துறை அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நலன்புரித் திட்டத்துக்கமைய விவசாயிகளுக்கு வழங்கப்படும் விவசாயிகளுக்கான கொடுப்பனவு முறையாக வழங்கப்படும். தேசிய மட்டத்தில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகளை வளப்படுத்தாமல் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த முடியாது.

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் பெரும்போக விவசாயத்தில் 4800 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 3900 ஏக்கர் நெற் பயிர்ச்செய்கை பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.மதிப்பீடுகளின் பின்னர் நிவாரணம் வழங்கப்படும் என்றார். (அ)

# 45373 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்!

கொழும்பு, நவ. 30

நாட்டில் இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் 45373 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக டெங்கு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய் தடுப்பு பிரிவால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் வரை இம்மாதத்தில் 3024 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒக்ரோபர் மாதம் 2938 டெங்கு நோயாளர்களும், செப்ரெம்பர் மாதம் 2769 நோயாளர்களும், ஒகஸ்ட் மாதம் 3897 டெங்கு நோயாளர்களும், ஜூலை மாதம் 4506 டெங்கு நோயாளர்களும், ஜூன் மாதம் 3319 டெங்கு நோயார்களும், மே மாதம் 2647 பேரும், ஏப்ரல் மாதம் 2234 பேரும், மார்ச் மாதம் 3615 பேரும், பெப்ரவரி மாதம் 6007 பேரும், ஜனவரியில் 10417 பேரும் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மேல்மாகாணத்தில் 19455 பேரும், வடமாகாணத்தில் 5028 பேரும், டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவ் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 22 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பாதுகாப்புடன் விளையாடுகிறது அரசு!

**சுகீஸ்வர பண்டார குற்றச்சாட்டு**



கொழும்பு, நவ. 30

**தற்போதைய அரசாங்கம் நாட்டின் பாதுகாப்புடன் விளையாடி வருவதாக புதிய மக்கள் முன்னணியின் தலைவர் சுகீஸ்வர பண்டார குற்றம் சுமத்தியுள்ளார்.**

நாடு மெதுமெதுவாக பிரிவினைவாதத்துக்கு சென்று ஈழம் உருவாகுமா என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இராணுவ முகாம்களை அகற்றுவதற்கும் மூடப்பட்ட வீதிகளை திறப்பதற்கும் அரசாங்கம் இவ்வளவு ஏன் அவசரப்படுகின்றது என அவர் கேள்வி எழுப்பினார்.

முகாம்களை அகற்றுவதற்கு முன்னதாக பாதுகாப்புப் பேரவையின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஆனையிறவு இராணுவ முகாமையும் அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது எனவும் சுகீஸ்வர பண்டார கூறினார்.

வடக்கு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி நாட்டை பிரிவினைவாதத்துக்கு இட்டுச் செல்ல ஜனாதிபதி முயற்சிப்பதாக தென்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பல நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவரின் பிறந்த நாளை கொண்டாடுவதற்கு இடமளித்ததன் மூலம் தேசிய மக்கள் சக்தி தேசிய பாதுகாப்பை உதாசீனம் செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பில் ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு இடையிலும் முரண்பாடான கருத்துக்கள் நிலவி வருவதாக சுகீஸ்வர பண்டார தெரிவித்தார். (அ)

# கனடாவுக்கு அனுப்புவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட வைத்தியர்!

கொழும்பு, நவ. 30

கனடாவுக்கு பணிக்கு அனுப்புவதாக சுமார் ஏழு கோடி ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வைத்தியர் ஆனந்த அபேரத்னவுக்கு பிணை வழங்க கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே மறுத்துள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக நூற்றுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவினர் முன்வைத்த அறிக்கைக்கு அமைய பிரதம நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சந்தேக நபரான வைத்தியர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் பிணை வழங்குமாறு கோரியபோது, மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணம் அனைத்தும் செலுத்தப்பட்டதன் பின்னர் பிணை வழங்குவது குறித்து பரிசீலிப்பதாக நீதவான் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை விசாரணைப் பிரிவுக்கு வழங்குமாறும் நீதவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய, சந்தேக நபரான வைத்தியரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீயானி மனம்பேரி என்ற சட்டத்தரணியும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவருக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது. (அ)

# விளையாட்டுக்களில் நடக்கும் மோசடி நேரடியாக முறையிடுமாறு கோரிக்கை

கொழும்பு, நவ. 30

விளையாட்டு நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் நேரடியாகத் தெரிவிக்குமாறு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

சுகததாச தேசிய விளையாட்டு வளாக அதிகார சபையை பார்வையிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன, இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

இதன்போது கருத்துரைத்த அமைச்சர்-அரசியல் தொடர்புகள் மற்றும் கடந்த கால குறைபாடுகளை விட்டுவிட்டு முன்னேறவேண்டும். எனினும், நடந்துள்ள மோசடி மற்றும் ஊழல்களை புறக்கணிக்க முடியாது.

இந்தநிலையில், தேசிய ஒற்றுமையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது. இதற்காக குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால தேசிய திட்டங்களை நோக்கி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன-என்றார். (அ)

# இலங்கைக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ள சிங்கப்பூர்

கொழும்பு, நவ. 30

இலங்கையின் புதிய பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமைத்துவத்தின் மீது சிங்கப்பூர் பிரதமர் லோரன்ஸ் வோங் நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஹரிணியின் நியமனத்துக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில், சிங்கப்பூரின் பிரதமர் எழுதிய கடிதத்திலேயே இந்த நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 நவம்பர் 18 அன்று இலங்கை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவினால், ஹரிணி அமரசூரிய மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார். எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் முனைவர் பட்டம் பெற்ற கல்வியாளரான 54 வயதான ஹரிணி கல்வி மற்றும் உயர்கல்வி துறைகளை தம்வசம் கொண்டிருக்கிறார்.

இந்தநிலையில், நாட்டை வழிநடத்தவும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் இலங்கை மக்கள் உங்களுக்கு வலுவான ஆணையை வழங்கியுள்ளனர் என்று ஹரிணியிடம், லோரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

"உங்கள் தலைமையின் கீழ், இலங்கை வெற்றிபெறும் மற்றும் வலுவடையும் என்று நான் நம்புகிறேன்" என்றும் வோங் எழுதியுள்ளார்.

"இராஜதந்திர உறவுகளில் 55ஆவது ஆண்டு நிறைவை 2025இல் நெருங்கும் நிலையில், சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்த ஒன்றிணைந்து செயற்பட தாம் விரும்புகிறேன்" என்றும் வோங் குறிப்பிட்டுள்ளார். (அ)

# எரிபொருளின் விலையை அரசு குறைக்கவேண்டும்!

**ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை**

கொழும்பு, நவ. 30

எரிபொருள் விலையை குறைக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

நாளை எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்வரும் எரிபொருள் விலை திருத்தத்தின் போது எரிபொருளின் விலையை 50 ரூபாவினால் குறைக்க வேண்டுமென அவர் கோரினார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி எரிபொருள் விலை குறைப்பு குறித்து தேர்தல் மேடைகளில் செய்த பிரசாரம் மெய்ப்பிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

மக்களைப் பற்றி பேசுவதற்காகவே தம்மை மக்கள் பாராளுமன்றுக்கு தெரிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# பால் மா திருடிய பெண் கைது!

கொழும்பு, நவ. 30

கொழும்பு 7இல் அமைந்துள்ள பல்பொருள் அங்காடியில் குழந்தைகளுக்கான பால் மா பைக்கெற்றுக்களை திருடிய சந்தேகத்தில் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் ஆறாயிரம் ரூபா பெறுமதியான பால் மா இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்காக இரண்டு பால் மா பைக்கெற்றுக்களை பணம் செலுத்தாது எடுத்துச் சென்றபோது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த பெண்ணை தடுத்து நிறுத்த முயற்சித்துள்ளனர்.

இதன்போது, குறித்த பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததை தொடர்ந்து குருந்துவத்த வைத்தியசாலைக்கு அருகாமையில் பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

பெண்ணிடமிருந்து குழந்தைகளுக்கான இரண்டு பால் மா பைக்கெற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

32 வயதான பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (அ)

# கனடாவில் தமிழ் தம்பதி கைது!

மொன்றியல், நவ. 30

கனடாவில் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் தமிழ் தம்பதி கைது செய்யப்பட்டுள்ளது.

ரொறன்றோவில் ஆயுத முனையில், சொகுசுக் கார் ஒன்றை கடத்திச் சென்றபோது ஏற்பட்ட விபத்தின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வாரம் பிரம்டன் பகுதியில் வைத்து அரச பஸ் மீது கார் ஒன்று மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட தமிழ் தம்பதி உட்பட மூன்று பேர் மீது விசாரணை நடத்தப்பட்டது. இதுகைது செய்யப்பட்ட மூவரில் 31 வய தான அனெஸ்டன் கணேசமூர்த்தி, 33 வய தான அபிரா பொன்னய்யா ஆகியோரும் உள்ளடங்கு கின்றனர்.

# நாணய நிதிய மூன்றாம் கட்ட மீளாய்வு இலங்கை வர்த்தக சம்மேளனம் வரவேற்பு

கொழும்பு, நவ. 30

மூன்றாம் கட்ட மீளாய்வு தொடர்பில் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடன் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதானது, மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதிலும், நிதியியல் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்துவதிலும் இலங்கை அடைந்திருக்கும் முன்னேற்றத்தைக் காண்பிப்பதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் அனுசரணை அளிக்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் தொடர்பில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம் கட்ட மீளாய்வை அடுத்து நாணய நிதிய அதிகாரிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்ரஸா மாணவர்கள் உயிரிழந்த விவகாரம்

# அதிபர், ஆசிரியர் ஆகியோருக்கு 2ஆம் திகதி வரை விளக்கமறியல்

சம்மாந்துறை, நவ. 30

**கைது செய்யப்பட்ட நிந்தவூர் அரபு மத்ரஸாவின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோரை டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய 2 பேரை ஓர் இலட்சம் ரூபாய் பிணையில் விடுவித்தும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.**

அம்பாறை காரைதீவு மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகில் உழவியந்திரம் வெள்ளத்தில் மூழ்கிய விபத்து சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் நிந்தவூர் மத்ரஸா அதிபர், ஆசிரியர் மற்றும் உதவியாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று வாக்குமூலம் பெற்ற பின்னர் சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் எம்.ரி. சபீர் அகமட் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது, மத்ரஸாவின் அதிபர் மற்றும் ஆசிரியரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய 2 உதவியாளர்களை பிணையில் விடுவித்தும் உத்தரவிட்டார்.

கடந்த 26 ஆம் திகதி நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மத்ரஸா முடிந்ததும் குறித்த மாணவர்களுக்கு வீட்டுக்குச் செல்ல பேருந்து இல்லாத காரணத்தால் குறித்த மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதுடன் நிர்வாகம் மெத்தனப் போக்குடன் இவ்விடயத்தில் நடந்து கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், மாணவர்கள் பயணம் செய்த குறித்த வீதி ஆபத்தானது என்பதால் உழவியந்திரத்தில் மாணவர்களை ஏற்றிச் செல்ல வேண்டாம் என இராணுவத்தினர் அறிவுறுத்தியிருந்தமையும் தெரியவந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் 11 மாணவர்களுடன் சென்ற உழவியந்திரம் நீரோட்டத்தில் சிக்கி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மாணவர்கள் ஐவர் உயிரிழந்தனர்.

இது தவிர உழவியந்திரத்தின் சாரதி மற்றும் உதவியாளரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதேவேளை, கல்முனை - அம்பாறை பிரதான வீதியில் நீர்மட்டம் குறைந்து இருந்தால் மாத்திரம் வழமை போன்று அனைத்து வாகனங்களும் செல்ல அனுமதி வழங்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.



# சுவாமி நடராஜானந்தரின் 121ஆவது ஜனனதினம்

காரைதீவு, நவ. 30

இராமகிருஷ்ணமிசன் துறவி சுவாமி நடராஜானந்தா ஜீ மஹராஜின் 121ஆவது ஜனனதின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.


அவர் பிறந்த காரைதீவு மண்ணில் அடிகளாரது திருவுருவச்சிலைக்கு முன்னால் இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் எஸ். மணிமாறன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பகவான் சிறீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வேதபாராயணத்தைத் தொடர்ந்து சுவாமியின் திருவுருவுச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தலும் புஸ்பாஞ்சலியும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன், சிறப்பு விருந்தினராக காரைதீவு பிரதேச செயலாளர் ஜி. அருணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்புரையை சுவாமி நடராஜானந்தா நூற்றாண்டு விழாச் சபையின் செயலாளர் வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

(எ)



# வெள்ளைக்கொடிகள் கட்டி துக்கதினம் அனுஷ்டிப்பு

சம்மாந்துறை, நவ. 30

அம்பாறை மாவட்டம் நிந்தவூர், மாவடிப்பள்ளி, சம்மாந்துறை பகுதிகளில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மத்ரஸாவில் கல்வி கற்று வந்த மாணவர்கள் உயிரிழந்த நிலையில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

(எ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகம்

மட்டக்களப்பு, நவ. 30

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனால் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

திருப்பெருந்துறை, நொச்சிமுனை, சத்துருக்கொண்டான், திராய்மடு, புதூர், திமிலை தீவு, வீச்சுக்கல்முனை, பெரிய உப்போடை, நாவற்குடா, சேத்துக்குடா, ஆகிய பிரதேசங்களிலுள்ள 710 குடும்பங்களுக்கு இவ்வாறு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சிறீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் இப் பிரதேசங்களுக்கு சென்று உணவுப் பொதிகளை வழங்கினார்.

சில பிரதேசங்களுக்கு இயந்திரப்படகு மூலம் கொண்டு சென்று உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



இராமகிருஷ்ண மிஷன் இல்ல மாணவர்கள், தொண்டர்கள் இப் பணியில் இணைந்து உணவுப் பொதிகளை மக்களுக்கு வழங்கினர்.

(எ)

# அம்பாறையில் வெள்ள பாதிப்புகள் குறித்து ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஆராய்வு





கல்முனை, நவ. 30

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்குவது குறித்து அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தன தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், ஆணையாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில், வெள்ள பாதிப்புகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

(எ)

# தேடுதல் மீண்டும் ஆரம்பம்

காரைதீவு , நவ. 30



அம்பாறை காரைதீவு மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகில் உழவியந்திரம் வெள்ளத்தில் சிக்கியதில் 5 மாணவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் இடைநிறுத்தப்பட்ட மீட்புப் பணிகள் நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை தேடுதல் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இருள் சூழ்ந்த நிலை மற்றும் அதிகமான காற்று என்பவற்றால் காணாமல் போன மாணவர்களை தேடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றுக்காலை மீண்டும் மீட்புப் பணிகள் ஆரம்பமாகின.

காணாமல் போன மத்ரஸா மாணவனை தேடி குறித்த மீட்புப்பணிகள் ஆரம்பமாகின.

இத் தேடுதல் நடவடிக்கையில் மேலதிகமாக கடற்படையினர், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர், சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை, மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மற்றும் காரைதீவு தமிழ் இளைஞர்கள் அமைப்பு ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்களும் ஈடுபட்டுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஸாவிலும் போர் நிறுத்தம்

## ஜனவரிக்குள் ஏற்படும் -அமெரிக்கா நம்பிக்கை

வாஷிங்டன், நவ. 30

**காஸாவிலும் போர் நிறுத்தம் ஏற்படும் என்று அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக் காலம் முடிவதற்குள் போர் நிறுத்தம் குறித்து நல்ல செய்தி வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இஸ்ரேல் இராணுவத்துக்கும் பலஸ்தீனத்தின் காஸா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் போராளிகளுக்கும் இடையே கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதல் கடும் போர் நடைபெற்று வருகிறது. காஸா பகுதியில் இதுவரை 44, 282 பேர் உயிரிழந்தனர். ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தச் சூழலில் எகிப்து அரசின் சமரசத்தின் பேரில் இஸ்ரேல் - காஸா இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பில் எகிப்து அரசின் உயர்நிலைக் குழு இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் முக்கிய பேச்சுகளை நடத்தியது.

இது குறித்து ஹமாஸ் வட்டாரங்கள் கூறும்போது, "லெபனான் உடன் எந்த நிபந்தனையும் இன்றி இஸ்ரேல் அரசு போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டிருக்கிறது. காஸாவிலும் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த விரும்புகிறோம். ஆனால், இஸ்ரேல் அரசு போர் நிறுத்தத்தை விரும்பவில்லை" என்று தெரிவித்தன.

இதுகுறித்து அமெரிக்க அரசு வட்டாரங்கள் கூறும்போது, "அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவிக் காலம் வரும் ஜனவரியில் முடிவடைகிறது. அதற்குள் காஸாவில் போர் நிறுத்தம் அமுலாகும். இது தொடர்பாக இஸ்ரேல் அரசு - காஸா நிர்வாகம் இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும்"-என்று தெரிவித்தன. (எ)

# சமூக வலைத்தளங்களை சிறார் பயன்படுத்த தடை

## ஆஸியில் சட்டம் நிறைவேற்றம்

சிட்னி, நவ. 30

16 வயதுக்குட்பட்ட சிறார்கள் பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தத் தடை விதிக்கும் புதிய சட்டத்தை அவுஸ்திரேலியா அரசு நிறைவேற்றியுள்ளது.

உலகத்திலேயே முதல் முறையாக 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ரிக்ரொக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்த தடை விதிக்கும் இந்த சட்டத்தை அவுஸ்திரேலியா பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. சிறுவர்கள் உள்நுழைவதை தடுக்காவிட்டால் சம்பந்தப்பட்ட சமூக வலைத்தளங்களுக்கு 32 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் சோதனை முறையில் வரும் ஜனவரி மாதம் அமுல்படுத்தப்படவுள்ளது. இது முழுமையாக நடைமுறைக்கு வர ஒரு வருடம் ஆகலாம் என்று கூறப்படுகிறது. பிரான்ஸ், அமெரிக்காவின் சில மாகாணங்களில் பெற்றோரின் அனுமதியின்றி சிறார்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், உலகிலேயே முதல் முறையாக அவுஸ்திரேலிய அரசுதான் சட்டம் கொண்டு வந்துள்ளது.

(எ)

# நிலச்சரிவில் சிக்கி 27 பேர் பலி



ஜகார்த்தா, நவ. 30

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 27 பேர் உயிரிழந்தனர்.

சுமத்ரா தீவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வடக்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள மேடான் நகரத்திலிருந்து பெரஸ் டாகி நகருக்கு செல்லும் வீதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச் சரிவில் சிக்கிய சுற்றுலா பேருந்து மீது மரங்கள், மண் மற்றும் பாறை கள் மூடின. இதனால் 7 பேர் உயிரிழந்தனர். 10இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்தது. (எ)


# இந்து மத தலைவர் கைது ஷேக் ஹசீனா கண்டனம்

புதுடில்லி, நவ. 30

பங்களாதேஷில் இந்து மத தலைவர் சின்மோய் கிருஷ்ண தாஸ் அநீதியான முறையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவாமி லீக்கின் எக்ஸ் வலைத்தளப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "சனாதன மத சமூகத்தின் உயர்மட்ட தலைவர் ஒருவர் அநீதியான முறையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். சிட்டகாங்கில் ஒரு கோவில் எரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு, மசூதிகள், கோவில்கள், தேவாலயங்கள், மடங்கள் மற்றும் அகமதியா சமூகத்தினரின் வீடுகள் தாக்கப்பட்டன, சேதப்படுத்தப்பட்டன, சூறையாடப்பட்டன, தீவைக்கப்பட்டன. மத சுதந்திரத்துக்கும், அனைத்து சமூக மக்களின் வாழ்க்கைக்கும், அவர்களின் உடைமைகளுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். அது உறுதி செய்யப்பட வேண்டும்"-என்று ஷேக் ஹசீனா வலியுறுத்தியுள்ளார்.

# இந்து அமைப்புக்கு தடை விதிக்க பங்களாதேஷ் நீதிமன்றம் மறுப்பு




டாக்கா, நவ. 30

பங்களாதேஷில் இஸ்கான் அமைப்புக்கு தடை விதிக்க கோரிய மனுவை டாக்கா உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

பங்களாதேஷில் இடைக்கால அரசு பொறுப்பேற்ற பிறகு இந்துக்களுக்கு எதிரான தாக்குதல்களை கண்டித்து இஸ்கான் அமைப்பு தலைமையில் தொடர் போராட்டங்கள், பேரணிகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில், குறித்த அமைப்பின் தலைவர் சின்மோய் கிருஷ்ண தாஸ், தேச துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார். இது, இந்துக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

கைது நடவடிக்கைக்கு எதிராக சிட்டகாங் நீதிமன்ற வளாகத்தில் நடந்த போராட்டத்தில் சைபுல் இஸ்லாம் அலி என்ற சட்டத்தரணி கொல்லப்பட்டார். இந்த வன்முறையை தொடர்ந்து பங்களாதேஷில் இஸ்கான் அமைப்புக்கு தடை விதிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று டாக்கா உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, இஸ்கான் அமைப்பின் அண்மைய செயல்பாடுகள் தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த விவகாரத்தில் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும், இஸ்கான் செயல்பாடுகள் மற்றும் சட்டத்தரணி சைபுல் இஸ்லாம் கொலை தொடர்பில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்குகளில் இதுவரை 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பங்களாதேஷில் சட்டம் - ஒழுங்கை பராமரிப்பதிலும் மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதில் அரசு கவனமுடன் செயல்பட வேண்டும் என்று தெரிவித்த நீதிபதிகள் இஸ்கான் அமைப்புக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தனர்.


(எ)

# டொனால்ட் ட்ரம்புடன் ஸுகர்பெர்க் சந்திப்பு

புளோரிடா, நவ. 30

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பை, மெட்டா நிறுவன தலைமை அதிகாரி மார்க் ஸூகர்பெர்க் புளோரிடாவில் சந்தித்துள்ளார்.

இது குறித்து ட்ரம்பின் இரண்டாவது ஆட்சி காலத்தில் வெள்ளை மாளிகையின் துணை தலைமை அதிகாரியாக செயல்படவுள்ள ஸ்டீபன் மில்லர் தெரிவித்தவை வருமாறு, "அனைத்து தொழில் நிறுவன தலைவர்களும் ட்ரம்பின் பொருளாதார திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பது போலவே மார்க் ஸூகர்பெர்க்கும் சந்தித்து தனது ஆதரவை தெரிவித்தார். அதில் அவர் உறுதியாக உள்ளார். அது அவரது ஆர்வமாக உள்ளது"-என்றார். (எ)



# 140 விமானங்கள் இரத்து 1200 பாடசாலைகள் மூடல்

சியோல், நவ. 30

தென் கொரியா கடுமையான பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்த நாட்டில் வசிக்கும் மக்கள் வீட்டைவிட்டு வெளியே வராமல் சிக்கித் தவித்து வருகின்றனர். விமான சேவையுடன், போக்குவரத்து சேவையும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

120 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தலைநகரான சியோலில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டிருப்பது இது மூன்றாவது முறை. நேற்று முன்தினம் காலை வரை சியோலின் சில பகுதிகளில் 40 சென்ரி மீற்றர் அளவுக்கும் அதிகமான பனி பொழிந்துள்ளது. இதனால் 140இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

கியோங்கி மாகாணத்தில் முன்பள்ளிகள் உட்பட 1,285 பாடசாலைகள் மூடப்பட்டன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் 42 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை அணி

## தென்னாபிரிக்கா அபார பந்து வீச்சு

டர்பன், நவ. 30

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 42 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் முதன்முறையாக டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து மோசமான சாதனையை படைத்தது இலங்கை அணி.



டர்பனில் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டி மழையால் வெகுவாக பாதிக்கப்பட்டது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் தென்னா பிரிக்க அணி 20. 4 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 80 ஓட்டங்கள் எடுத்திருந்தது. எய் டன் மார்க்ரம் 9, டோனி டி ஸோர்ஸி 4, டிரிஸ் டன் ஸ்டப்ஸ் 16, டேவிட் பெடிங்ஹாம் 4 ஓட் டங்க ளில் ஆட்டமிழந்தனர். தெம்பா பவுமா 28, கைல் வெரெய்ன் 9 ஓட்டங்களுடன் ஆட் டமிழக்காமல் இருந்தனர்.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் நேற்று முன்தினமும் தொடர்ந்து விளையாடியது. கைல் வெரெய்ன் (9) மேற்கொண்டு ஓட்டம் ஏதும் எடுக்காத நிலையில் லகிரு குமார பந்தில் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து மார்க்கோ ஜான்சன் 13, ஜெரால்ட் கோட்ஸி 1, கேசவ் மகாராஜ் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

ஒரு புறம் விக்கெட்கள் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பாக விளையாடி தனது 22ஆவது அரைச் சதத்தை கடந்த அணித் தலைவர் தெம்பா பவுமா 117 பந்துகளில், ஒரு சிக்ஸர், 9 பௌண்ரிகளுடன் 70 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

கடைசி வீரராக ககிசோ ரபாடா 15 ஓட்டங்களில் வெளியேற தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 49. 4 ஓவர்களில் 191 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. வியான் முல்டர் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை அணி தரப்பில் அஷித பெர்னாண்டோ, லகிரு குமார ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் விஷ்வ பெர்னாண்டோ, பிரபாத் ஜெயசூர்யா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, மார்க்கோ ஜான்சனின் வேகப்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 13. 5 ஓவர்களில் 42 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பதும் நிஸ்ஸங்க (3), தினேஷ் சந்திமால் (0), அஞ்சலோ மத்தியூஸ் (1), தனஞ்ஜெய டி சில்வா (7), பிரபாத் ஜெயசூர்யா (0), விஷ்வ பெர்னாண்டோ (0), அஷித பெர்னாண்டோ (0) ஆகியோர் மார்கோ ஜான்சன் பந்தில் நடையை கட்டினர். கமிந்து மெண்டிஸ் (13), குசல் மெண்டிஸ் (0) ஆகியோர் ஜெரால்ட் கோட்ஸி பந்திலும், திமுத் கருணாரத்னே (2), ககிசோ ரபாடா பந்திலும் ஆட்டமிழந்தனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை அணி மிகக் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழப்பது இதுவே முதன்முறையாகும். இதற்கு முன்னர் 1994ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக கண்டியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 71 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தென்னாபிரிக்க அணி தரப்பில் மார்க்கோ ஜான்சன் 6. 5 ஓவர்களை வீசி ஓர் ஓட் டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 7 விக்கெட்களை வீழ்த்தினார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் எதிரணி 50 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழப்பது இது 4ஆவது முறையாகும். இதற்கு முன்னர் நியூசிலாந்து 45 ஓட்டங்களிலும், அவுஸ்திரேலியா 47 ஓட்டங்களுக்கும், பாகிஸ்தான் 49 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தது.

டர்பன் டெஸ்ட் போட்டியில் 149 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்களை எடுத்துள்ளதோடு, 292 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

## ஹாரி புரூக் சதம் அடித்து அசத்தல் வலுவான நிலையில் இங்கிலாந்து



வெலிங்டன், நவ. 30

ஹாரி புரூக் அடித்த சதத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணி வலுவான நிலையை அடைந்துள்ளது. அந்த அணி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 319 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணி 348 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக வில்லியம்சன் 93 ஓட்டங்கள் சேர்த்தார். இங்கிலாந்து தரப்பில் சோயப் பஷீர், பிரைடன் கார்ஸ் தலா 4 விக்கெட்கள் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து 5 விக்கெட்களை இழந்து 319 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இங்கிலாந்து தரப்பில் ஹாரி புரூக் சதம் அடித்து அசத்தினார். இங்கிலாந்து இன்னும் 29 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. நியூசிலாந்து சார்பில் நாதன் ஸ்மித் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

## பந்து வீச்சு தரவரிசையில் பும்ரா மீண்டும் முதலிடம்



டுபாய், நவ. 30

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில் இந்திய வீரர் ஜஸ்பிரீத் பும்ரா 2 இடங்கள் முன்னேறி மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான பெர்த் டெஸ்ட் போட்டியில் பும்ரா இரு இன்னிங்ஸையும் சேர்த்து 8 விக்கெட்களை வீழ்த்தினார். இதன் மூலம் அவர், தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளார்.

இந்த போட்டி தொடங்குவதற்கு முன்னர் தரவரிசையில் பும்ரா 3ஆவது இடத்தில் இருந்தார். தற்போது 883 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார். தென்னாபிரிக்காவின் ககிசோ ரபாடா, அவுஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட் ஆகியோர் தலா ஒரு இடத்தை இழந்து முறையே 2 மற்றும் 3ஆவது இடங்களில் உள்ளனர். (எ)

## மோசமான சாதனையில் இணைந்தார் ஜோ ரூட்

வெலிங்டன், நவ. 30

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது.

இது இங்கிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஜோ ரூட்டின் 150ஆவது டெஸ்ட் போட்டியாக அமைந்தது. ஆனால், இந்த போட்டியின் முதல் இன்னிங்ஸில் 4 பந்துகளை எதிர்கொண்ட அவர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தங்களுடைய 150ஆவது போட்டியில் ஓட்டமின்றி ஆட்டமிழந்த வீரர்களின் மோசமான சாதனை பட்டியலில் ஸ்டீவ் வோக், ரிக்கி பொன்டிங் ஆகியோருடன் ஜோ ரூட் இணைந்துள்ளார். (எ)

## துடுப்பாட்ட தரவரிசையில் ஜெய்ஸ்வால் 2ஆம் இடம்



டுபாய், நவ. 30

ஐ. சி. சி. டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசை பட்டியலில் இந்திய அணியின் தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 2 இடங்கள் முன்னேறி 825 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். பெர்த் டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்கள் விளாசியிருந்தார். இதன் மூலம் அவர், தரவரிசையில் சீரான முன்னேற்றம் கண்டுள்ளார். இங்கிலாந்தின் ஜோ ரூட் 903 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார்.

ஆஸிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சதம் விளாசிய இந்தியாவின் விராட் கோலி 9 இடங்கள் முன்னேறி 13ஆவது இடத்தை பிடித்துள்ளார். சகல துறை வீரர்களுக்கான தரவரிசையில் ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் முதல் இரு இடங்களில் தொடர்கின்றனர். (எ)



## 100 விக்கெட் வீழ்த்தி ஜெயசூர்யா சாதனை

டர்பன், நவ. 30

தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி டர்பனில் தொடங்கியது.

இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் கைப்பற்றிய 2 விக்கெட்களையும் சேர்த்து 17 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பிரபாத் ஜெயசூர்யா இதுவரை 100 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் குறைந்த ஆட்டங்களில் 100 விக்கெட்கள் கைப்பற்றிய பந்து வீச்சாளர் என்ற சாதனை பட்டியலில் 2ஆவது இடம்பிடித்து அசத்தியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரன்...

வே.பிரபாகரன், அந்த அமைப்பின் சீருடையில் உள்ள புகைப்படத்தை அவர் தனது சமூக ஊடகத்தில் பகிர்ந்திருந்தார். (அ)

## சீரற்ற...

79 பாதுகாப்பு நிலையங்களில் 2 ஆயிரத்து 136 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 342 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

## சீனத்தூதர்...

சீனத் தூதுவர் தனது தூதுவர் பதவிக்கு பொருத்தம் இல்லாத விடயங்களில் தலையிடுவதையும் தமிழ் மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களை விதைப்பதையும் தவிர்த்து கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் சீனத் தூதர் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட நிலையில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விட்டார்கள். இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்து விட்டன கருத்து கூறியிருந்தார்.

இந்தக் கருத்தை எமது கட்சி கண்டிக்கிறது. இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர் ஒருவர் இவ்வாறு கருத்து கூறுவது நாகரிகமான செயல் அல்ல என்பதோடு அவ்வாறான கருத்தை தூதுவர் ஒருவர் கூறக்கூடாது.

உண்மையில் தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி விட்டார்கள் என கூற முடியாத நிலையில் சீனத் தூதுவர் எந்த அடிப்படையில் அவ்வாறான கருத்தை முன்வைத்தார் என்பது தொடர்பில் கேட்க விரும்புகிறேன்.

தேசிய மக்கள் சக்திக்கு யாழ்.தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. மூன்றாவது ஆசனம் சுயேச்சை குழுக்கள் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்ததால் கிடைத்தது.

இம்முறை இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை .

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தெற்கை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய அங்கஜன், டக்ளஸ் போன்றோர் பெற்ற வாக்குகளை விட இம்முறை தேசிய மக்கள் சக்தி சுமார் 15,000 வாக்குகள் குறைவாகப் பெற்றுள்ளனர்.

தெற்கு கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வாக்களிக்கும் ஒரு பகுதியினர் அங்கஜன், டக்ளஸை நிராகரித்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளமையே உண்மையான விடயம்.

இவற்றை அறியாத சீனத் தூதுவர் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்பட தயாராகிவிட்டனர் என்ற கருத்தை கூறுவது ஒன்றில் கேட்ட கேள்வி விளக்கம் என்னால் கூறிய பதிலாக இருக்க வேண்டும். அல்லது தமிழ் மக்களை வேண்டுமென்றே தவறான பாதையில் இட்டு செல்வதாக பார்க்க முடியும்.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கு தமது ஆதரவை கொடுத்து வரும் நிலையில் அவர்களின் கோரிக்கை தொடர்பில் சீனத் தூதுவர் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூற வேண்டும்.

அதை விடுத்து பூலோக அரசியல் போட்டி காரணமாக சீனா தமது ஆதிக்கத்தை அதிகரிப்பதற்காக இனவாத கருத்துக்களை தெரிவிப்பது ஆரோக்கியமான விடயமல் அல்ல.

ஆகவே உலக வல்லரசில் ஒன்றாக சீனத் தூதுவர் தனது தூதுவர் பதவிக்கு பொருத்தம் இல்லாத விடயங்களில் தலையிடுவதையும் தமிழ் மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களை விதைப்பதையும் தவிர்த்து கொள்ள வேண்டும் - என்றார். (அ)

## ஜனாதிபதி...

தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் மனதில் உள்ள சோகங்களை அவர்களை நினைவு கூறுகிற இந்த சந்தர்ப்பத்தையும் எவ்வித இடையூறுகளும் இல்லாமல் முன்னெடுப்பதற்கான அனுமதியை வழங்கிய ஜனாதிபதிக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் நாங்கள் பார்க்கின்றபோது மாவீரர் நினைவேந்தலின்போது பொலிஸார் மற்றும் இராணுவத்தின் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணம் காணப்பட்ட நிலையில், இம்முறை மாவீரர் தின நினைவேந்தலின் போது ஒரு சில இடங்களில் பொலிஸாரினால் அசௌகரியங்கள் ஏற்படுத்தப் பட்டது.

எனினும் இம்முறை ஒரு நிறைவான நினைவேந்தல் நிகழ்வு வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதிக்கும், தற்போதைய அரசுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

## மாகாணங்...

பயணம்தான். எந்தவொரு நபரையும் அரியணையேற்றுவதற்காக தோள் கொடுத்து செயற்படமாட்டோம்.

அமையும் கூட்டணிகள்கூட எமது கட்சி தலைமையிலேயே அமையும்.

மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வழியில் இந்த அரசாங்கம் பயணித்தால் அதனை வரவேற்போம். வாழ்த்துவோம்.

இதைவிடுத்து மாவீரர் வாரத்துக்கு இடமளித்து, தமிழ் டயஸ்போராக்களின் தேவைக்கேற்ப செயற்பட்டால், மாகாண சபைகளுக்கு பொலிஸ் உள்ளிட்ட அதிகாரங்களை வழங்க முற்பட்டால் இதனை தடுப்பதற்கு நாம் முன்னின்று செயற்படுவோம். அதேபோல அமெரிக்க, இந்திய நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படவும் இடமளிக்கமாட்டோம்- என்றார். (அ)

## பயங்கரவாதம்...

ஒழிப்போம் எனவும் அரசாங்கம் கூறியுள்ளது.அந்த வகையில் நாமும் ஊழல் மோசடிகளுக்கு எதிரானவர்கள் .

அரசியல் நியமனங்களின்போது குடும்பத்தார் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என அரசாங்கம் கூறியது. அதெபோன்று ஐ.எம்.எவ். உடன்படிக்கை மாற்றப்படும் எனவும் அரசாங்கம் கூறியது.

ஆனால் அந்த விடயம் நிறைவேற்றப்படுவதாக தெரியவில்லை. அதேபோன்று அரசாங்கம் தேர்தல் மேடைகளில் கூறிய விடயங்களுக்கும் தற்போது இடம்பெறம் விடயங்களுக்கும் இடையில் பரஸ்பரம் வேறுபாடு காணப்படகின்றது.


கடந்த வாரத்தில் வடக்கில் இடம்பெற்ற விடயங்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஓர் அச்சத்தைத் தோற்றவித்துள்ளது. வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குமோ என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.அத்தகைய விடயம் இடம் பெற்றால் அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என வினவ விரும்புகின்றோம். அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலம் உள்ளது. ஆனால் மக்களின் எதிர்பார்ப்புக்களை அரசாங்கம் நிறைவேற்றுகின்றதா என தெரியவில்லை.

அதேபோன்று தேசியமக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக சம்பளம் கட்சியின் நிதியத்திற்கே செல்லும் என கூறப்பட்டது. இத்தகைய பின்னணியில் நாட்டு மக்களின் வரிப் பணத்தை எவ்வாறு அவர்கள் கட்சியின் தேவைக்காக பயன்படுத்த முடியும் என வினவ விரும்புகின்றேன்-என்றார். (அ)

# கால் நடையாக சென்ற அநுர

## வியப்பில் ஆழ்ந்த பொதுமக்கள்

கொழும்பு, நவ. 30




ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க கால் நடையாக அமைச்சுக்கு சென்றதனை பார்வையிட்ட பொதுமக்கள் ஆச்சரியமடைந்தனர் என சிங்கள இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நிதியமைச்சின் பணிமனைக்கு அநுர குமார திஸநாயக்ககால் நடையாக சென்றுள்ளார்.

தனது பாதுகாவலர்கள் சகிதம் அவர் கால் நடையாக நிதியமைச்சுக்கு வருகை தந்தது அங்கிருந்த பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஜனாதிபதி செயலகமும், நிதியமைச்சும் மிக அருகாமையில் அமைந்துள்ளதால் அவர் தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் கால் நடையாக நிதியமைச்சுக்கு சென்றுள்ளார்.

அசுரவின் இந்த செயலை கண்ட பொதுமக்களும் நிதியமைச்சின் அதிகாரிகளும் ஆச்சரியமடைந்தனர் என சிங்கள இணையத்தளத்தின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கோப், கோபா குழுக்களின் தலைமை கோரும் எதிரணி

கொழும்பு, நவ. 30

பாராளுமன்றத்தில் சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதி தவிசாளர் பதவிகளுக்கு ஆளுங் கட்சி எம்.பிக்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், முக்கிய குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோப், கோபா மற்றும் அரச நிதி தொடர்பான குழுக்களின் தலைமைப் பதவியை தமது அணிக்கு வழங்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக பண்புகளை இந்த அரசாங்கம் மதிக்கின்றதெனில், நாடாளுமன்ற குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிகளுக்கு வழங்கப்படுவதே சிறப்பாக அமையும் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு எதிரணிகள் கூட்டாக மனுவொன்றை கையளிக்க திட்டமிட்டுள்ளன. (அ)

# எம்.பிக்களின் வரப்பிரசாதங்கள் எதுவுமே குறைக்கப்படவில்லை!

கொழும்பு, நவ. 30

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள் முன்னரை போன்றே வழங்கப்படும் எனவும், இதுவரை குறித்த வரப்பிரசாதங்கள் எந்தவிதத்திலும் குறைக்கப்படவில்லை எனவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக 35 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களால் மீள ஒப்படைக்கப்பட்ட 25 முதல் 30 இல்லங்கள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முன்னுரிமைக்கு ஏற்ப அந்த இல்லங்கள் எதிர்வரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

மொத்தமுள்ள 108 இல்லங்களில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு 80 இல்லங்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு 28 இல்லங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்திலிருந்து 40 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் பதிவிடங்களைக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக விண்ணப்பிக்க முடியுமென அவர் கூறினார். (அ)

## வெள்ளைவான்...

அவமதிப்பு ஏற்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில் நீண்ட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷ்சங்க முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் நோக்கில் பொய்யான சாட்சியங்களை உருவாக்குதல், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கக்கூடிய ஊழல் செயலைச் செய்தமை தொடர்பில் தண்டனைச் சட்டத்தின் கீழ் பிரதிவாதிகளான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோர் மீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாணசபை...

தலைமையில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின்போது எடுக்கப்படும் தீர்மானங்களே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தொடர்பில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அடிப்படையாக அமையும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## நாடுமுழுவதும்...

போயுள்ளனர்.

மோசமான வானிலையால் உண்டான அனர்த்தங்களில் சிக்கி 99 வீடுகளும், 2,082 வீடுகளும் பகுதியள வில் சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது.

12,054 குடும்பங்களைச் சேர்ந்த 37,863 பேர் பாதுகாப்பான 338 இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வெளிசக்தி அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியக்கூடாது!

## சுயாதீன வெளிவிவகாரக் கொள்கையை பின்பற்றவேண்டும் என சீனா வலியுறுத்து

கொழும்பு, நவ. 30

**இலங்கை வெளிசக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியக் கூடாது சுயாதீன வெளிவிவகார கொள்கையை பின்பற்ற வேண்டும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

குறிப்பாக இலங்கையின் பொருளாதார நிலைமையை சில தரப்பினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த முயலும்போது இலங்கை சுயாதீன வெளிவிவகாரக் கொள்கையை பின்பற்றவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் சிலருடனான கருத்துபகிர்வின் போது அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வெளிநாடுகளின் உலக நாடுகளின் உதவி அவசியம் என சில உலக நாடுகள் இலங்கைக்கு தெரிவித்துள்ளன என குறிப்பிட்டுள்ள அவர், இது தவறான கருத்து, இலங்கை மக்கள் தங்களை குறித்து நம்பிக்கை கொண்டவர்களாயிருக்க வேண்டும், சீனா போன்ற சகாக்களுடன் உறவுகளை பேணுவது குறித்து கவனம் செலுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையை பொறுத்தவரை சீனாவுக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை. சீனாவின் உதவி இலங்கை சுதந்திரமான நாடாக மாறுவதற்கும் வெளிசக்திகளின் அழுத்தங்களை எதிர்கொள்வதற்கும் உதவும் என நாங்கள் உறுதியாக கருதுகின்றோம் என அவர் கூறினார். (அ)

# வாகனங்கள் இறக்குமதி அனுமதி ஓரிரு நாட்களில்

கொழும்பு, நவ. 30

வாகன இறக்குமதி மீண்டும் அனுமதிக்கப்படும் போது முதல் கட்டமாக பஸ்கள் மற்றும் லொறிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்னும் ஓரிரு நாட்களில் இதற்கான அனுமதி நிதி அமைச்சினால் வழங்கப்படும் என்று தாம் நம்புவதாக இலங்கை வாகன இறக்குதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்தார்.

வாகன இறக்குமதியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின் கீழ் கார்களை இறக்குமதி செய்ய முடியும் என்றும் இந்த நடவடிக்கை அடுத்த வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பயன்படுத்திய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டால் அரசாங்கத்துக்கு அதிக வருமானம் கிடைக்கும். மேலும் அந்நிய செலாவணியையும் சேமிக்க முடியும் என இந்திக்க சம்பத் மெரெஞ்சிகே சுட்டிக்காட்டினார். (அ)

## வடக்கின் வெள்ள அனர்த்தம்

# இடர்கால நிலை தொடர்பில் ஆளுநருடன் சிறீதரன் பேச்சு

யாழ்ப்பாணம், நவ. 30

வடக்கின் வெள்ளப் பேரிடர் பாதிப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.


நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்கல், கால நிலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# இந்தியாவுடன் உறவை வலுப்படுத்தவேண்டும்!

## அரசுக்கு ரணில் ஆலோசனை

புதுடில்லி, நவ. 30



இலங்கையில் தற்போது அமையப் பெற்றுள்ள அரசாங்கம் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக் கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள இந்தூர் நகருக்கு சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்நகரில் அமைந்துள்ள பழைய கோட்டை உட்பட பல அரச மாளிகைகளுக்கு விஜயம் செய்துள்ளார். (அ)

## மைத்திரிபால படுகொலை முயற்சி:

# இரண்டு புலி சந்தேகநபர்களின் பிணை கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, நவ. 30

2008ஆம் ஆண்டு பொரலஸ்கமுவவில் அப்போதைய அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை படுகொலை செய்ய முயற்சித்த இரண்டு விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களின் பிணை கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ்.சபுவித்த நேற்றுமுன்தினம் நிராகரித்துள்ளார்.

சந்தேக நபர்களான 'கோஸ்தர்' அல்லது 'மொரிஸ்' என அழைக்கப்படும் செல்வரா சா கிருபாகரன் மற்றும் 'தனுஷ்' என அழைக்கப்படும் தம்பையா பிரகாஷ் ஆகியோர் சுமார் 15 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் சட்ட பிரதிநிதிகளான சுரங்க பண்டார மற்றும் அசித்த விபுலநாயக்க ஆகியோர் பிணை கோரியிருந்தனர்.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், பிணைக் கோரிக்கையை கடுமையாக எதிர்த்திருந்தார்.

சந்தேகநபர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், வழக்கை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக உறுதி செய்த நீதிபதி, 2025 ஏப்ரல் 28, 29 மற்றும் 30 திகதிகளில் சாட்சியங்களை ஆய்வு செய்யவுள்ளதாவும் தெரிவித்தார். (அ)

# ஏழரை கோடி ரூபா திருட்டு சம்பவம் பணத்துடன் டுபாய்க்குத் தப்பிய நபர்

கொழும்பு, நவ. 30

மினுவாங்கொடை பகுதியில் ஏழரைக் கோடி ரூபாவுடன் கைது செய்யப்பட்ட பிரதான இரண்டு சந்தேக நபர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய ஒருவர் கொள்ளையின் எஞ்சிய பணத்துடன் டுபாய்க்குத் தப்பிச் சென்றுள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் 40 இலட்சம் ரூபாவுடன் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேக நபர்கள் இருவரும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை பகுதியில் வைத்து, கம்பஹா பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இருவரும் எம்பிலிபிட்டிய - செவனகல பகுதியில் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் கம்பஹா பகுதிக்குத் தப்பிச்சென்றுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

இதனையடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர்கள் மினுவாங்கொடை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 37 மற்றும் 40 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சஜித் தரப்புக்குள் முறுகல் :

# தனிவழி செல்லும் பங்காளி கட்சிகள்

கொழும்பு, நவ. 30

பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்குறுதியளித்தபடி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் வழங்கப்படாவிட்டால் எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் அக்கட்சிகள் கவனம் செலுத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் முற்போக்கு முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சுதந்திர மக்கள் பேரவை உள்ளிட்ட பல கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டன.

இந்நிலையில் தேர்தல் முடிவுகளின்படி, ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளில் ஒன்றுக்கு கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் ஏற்கனவே வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நான்கு இடங்களுக்கும் யாரும் நியமிக்கப்படவில்லை.

அதற்காக தேசியப் பட்டியலை பிரதிநிதித்துவப்படுத்தி டலஸ் அழகப்பெரும, சுஜீவ சேனசிங்க, இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர், ஜீ.எல். பீரிஸ், அத்துடன் தேர்தலில் தோல்வியடைந்த ஹிருணிகா பிரேமச்சந்திர, துஷார இந்துனில், இரான் விக்கிரமரத்ன, மனோ கணேசன், திஸ்ஸ அத்தநாயக்க போன்றவர்களும் கோரியுள்ளனர்.

அத்துடன், கூட்டணியில் போட்டியிட்ட கட்சிகளும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை கோரியமையினால், ஐக்கிய மக்கள் சக்திக்குள் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... லிமிடெட் நிறுவனத்தினரால் 30.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org